## முதல்வர் மு.க.ஸ்டாலின், தமது ஆளுமைத் திறனால் தொடர்ந்து வெற்றிகளைப் பெறுகிறார்!

# தமிழினத்தின் உயர்வுக்காக கடைசி வரை பாடுபட்டவர் கலைஞர்!

## அமைச்சர் எ.வ.வேலு எழுதிய “கலைஞர் எனும் தாய்” நூல் வெளியீட்டு விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் புகழாரம்!

**சென்னை, ஆக 26-**

**அமைச்சர் எ.வ.வேலு எழுதிய ”கலைஞர் எனும் தாய்” நூல் வெளியீட்டு விழாவில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பேசுகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆளுமைத் திறத்தினால் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வருகிறார் எனவும், தமிழினத்தின் உயர்வுக்காக கடைசி வரை பாடுபட்டவர், போராடியவர் கலைஞர் என்றும் புகழாரம் சூட்டினார்.**

**அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் எழுதிய ‘கலைஞர் எனும் தாய்’ நூல் வெளியிட்டு விழாவில் நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

என்னுடைய அருமை நண்பர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே,

இங்கே வருகை தந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே,அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். அதிகாரிகளே மற்றும் அறிவார்ந்த மக்களே,

இங்கே இருப்பவர்கள் எல்லாம் பேச்சாளர்கள்தான், அறிவாளிகள்தான் இந்த அறிவாளிகள் நிறைந்த அவையில், பேசாமல் இருப்பதுதான் மிகவும் அறிவாளித்தனம் என்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுது நான் பேசித்தான் ஆகவேண்டும். ஏதாவது தவறு இருந்தால், தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு வெற்றி விழா அவருடைய உடன்பிறப்புகள் இந்த ஆண்டு முழுவதும் அவ்விழாவினைக் கொண்டாடிய விதம் இருக்கிறதே எத்தனை மாவட்டங்களில், எத்தனை எத்தனை விதமாக உலகத்திலேயே எந்தவொரு அரசியல் தலைவருக்கும் இதுபோன்று நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட மாட்டார்கள்; கொண்டாடப் போவதுமில்லை.

எந்த அளவிற்கு அவர்மீது ஓர் அன்பு, ஒரு பாசம் இருந்தால், பேசுகிறவர்களுக்கும் சரி, கேட்கிறவர்களுக்கும் சரி இராமாயணம், பாகவதம் கதை கேட்பதுபோன்று, பக்தர்கள் போன்று அதுபோன்று கேட்பார்கள்.

முதலமைச்சருக்கு எத்தனையோ பணிகள் இருந்தபோதிலும், எத்தனையோ விழாக்களுக்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கின்றார்.

நாம் எல்லோரும் உள்ளே பார்க்கிறோம். வெளியில் நல்லவர்களாக இருப்பவர்கள், வீட்டிலும் நல்லவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. வெளியில் கிடைக்கின்ற மரியாதை, வீட்டில் அதே மரியாதை கிடைக்கும் என்று நினைக்க முடியாது.

கலைஞர் அவர்களோடு, பிறந்ததிலிருந்து அவர் கூடவே இருந்து 24 மணிநேரமும் எல்லாத் தருணங்களிலும், எந்த எந்த விதத்திலே மு.க.ஸ்டாலின் அவர்கள், அவருடைய அப்பாவை பார்த்திருப்பார்.

எவ்வளவோ வேதனைகள், கஷ்டங்கள் இருந்தாலும், அதனை பொதுவாழ்க்கையில் வெளிகாட்ட முடியாது. அவர்களும் மனிதர்கள்தானே. அதை வீட்டில்தான் காட்ட முடியும். வீட்டில் அவர் எப்படி சமாளித்திருப்பார். இவர் கஷ்டப்பட்டாலும், மற்றவர்கள் கஷ்டப்படக் கூடாது என்று, தட்டிக் கொடுத்திருப்பார்.

ஒரு தலைவனாக, சமுதாயத்தில் அவருடைய கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல, உடன்பிறப்புகளுக்கு மட்டுமல்ல, வீட்டில்கூட அதுபோன்ற ஒரு தலைவனாக இருந்தால்தான் பாசம், பக்தி.

படையப்பா திரைப்படத்திற்கு பிரிவியூ காட்சிக்கு கலைஞர் அவர்களை அழைத்திருந்தோம். கலைஞரோடு நிறைய பேர் வந்திருந்தார்கள். நான் ஸ்டாலின் அவர்கள் எங்கே என்று பார்த்தேன். அவர் இரண்டு வரிசைகளுக்கு முன் அமர்ந்திருந்தார். உடனே நான் அவரை, இங்கே வாங்க, இங்கே வாங்க என்று சொன்னேன்.

இல்லை, இல்லை, இங்கேயே உட்காருகிறேன் என்று சொன்னார். அவ்வளவு மரியாதை அவருக்கு.

இங்கே வந்து நான் எதைப் பேசவேண்டும் என்பதைவிட, எதைப் பேசக்கூடாது என்று பட்டியல் போட்டு வைத்தேன்.

எ.வ.வேலு அவர்கள் சொன்னார்கள், இது அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியல்ல; இது ஒரு நூல் வெளியிட்டு விழா என்று.

கலைஞரைப்பற்றி சொல்லவேண்டுமானால், சினிமா, இலக்கியம், அரசியல் இந்த மூன்றுதான்.

எனக்கு சினிமாவைப்பற்றி நிறைய தெரியும், அதைப்பற்றி நான் நிறைய பேசியிருக்கிறேன். இலக்கியத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. கலைஞருடைய இலக்கியம், கதைகள், கவிதைகள் ஆகியவற்றை நான் படித்ததில்லை.

மீதமிருப்பது அவருடைய அரசியல்தான். அதைப்பற்றி நான் இங்கே பேசவேண்டும் என்றால், மிகவும் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும்.

### முதல்வரின் ஆளுமை - உழைப்பு!

மதிப்பிற்குரிய நண்பர் ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சரான பிறகு, அவரை சந்தித்த எல்லா தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தல் உள்பட மிகப்பெரிய வெற்றியடைந்ததற்கு அதுவே சொல்லும் அவருடைய ஆளுமை, அவருடைய உழைப்பு, அவருடைய அரசியல் ஞானம்.

உண்மையிலேயே நீங்கள் நிறைய பார்த்திருப்பீர்கள். ஓர் இயக்கமாகட்டும், ஒரு தலைவராகட்டும் அந்தத் தலைவர் மறைந்த பிறகு, அதற்குப் பிறகு வருகின்ற அவருடைய சந்ததிகள் அந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றுவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்; எத்தனை பேர் அதில் தோல்வியடைந்திருக்கிறார்கள்; எவ்வளவு திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைப்பற்றி பக்கத்து மாநிலத்தில் நடைபெறும் நிகழ்வுகளை எல்லாம் நீங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இதை சர்வ சாதாரணமாக இவர் செய்து கொண்டு போகிறார். அதற்கு மேலும் எனக்கு ஆச்சரியமான விஷயம் நான் பிரமித்துப் போவது என்னவென்றால்,

எப்பொழுதுமே ஸ்கூல் டீச்சருக்கு, நியூ ஸ்டூடண்சால் பிராபளமே கிடையாது; எளிதாக சமாளித்துவிடுவார்கள். ஆனால், பழைய ஸ்டூடண்ஸ் இருக்கிறார்களே அவர்களை சமாளிப்பது சாதாரண விஷயமல்ல.

இங்கே ஏகப்பட்ட பழைய ஸ்டூடண்ஸ் அதுவும் சாதாரண பழைய ஸ்டூடண்ஸ் இல்லை.

அவர்கள் எல்லாம் அசாத்தியமானவர்கள், எல்லாருமே தோல்வியடைந்தவர்கள் அல்ல. ரேங்க் வாங்கி விட்டு, அந்தக் கிளாசை விட்டு போகமாட்டேன் என்கிறார்கள்.

அவர்களையெல்லாம் சமாளிப்பது சாதாரண விஷயமில்லை. துரைமுருகன் என்று ஒருவர் இருக்கிறார், கலைஞர் கண்களிலேயே விரல் விட்டு ஆட்டியவர் அவர்.

அவரிடம் ஏதாவது ஒரு விஷயம் சொல்லி, இது எப்படி இருக்கிறது என்று சொன்னால்,

உடனே அவர் அப்படியா, சந்தோஷம் என்பார்.

நல்லா இருக்கு. அதனால் சந்தோஷம் என்று சொல்கிறாரா? என்னடா இப்படி செய்கிறீர்களே? என்று சந்தோஷம் என்று சொல்லுகிறாரா? என்று ஒன்றும் தெரியாது.

### முதல்வர் கையால் பெறுவது பெருமை!

ஸ்டாலின் சார், ஹேண்ட் ஆஃப் யூ.

இந்த அருமையான புத்தகத்தை ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு, அவருடைய கைகளால் நான் வாங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்த விழாவின் உண்மையான நாயகர் எ.வ.வேலு அவர்கள். எனக்கு அவரைப்பற்றி அதிகமாகத் தெரியாது.

கலைஞர் அவர்களோடு பழக்கமிருப்பதால், ஆற்காடு வீராசாமி அவர்கள், துரைமுருகன் அவர்கள், டி.ஆர்.பாலு அவர்கள், முரசொலி மாறன் அவர்கள் அதுபோன்றவர்களோடு பழகி, மற்றவர்களோடு எனக்கு அவ்வளவாகப் பழக்கமில்லை.

### எ.வ.வேலுவின் சிறப்பு பண்பு!

திருவண்ணாமலையில் ‘லால் சலாம்’ திரைப்படத்தின் சூட்டிங்கிற்காக நான் மூன்று முறை அங்கே சென்றிருக்கிறேன். அங்கே அவருடைய கல்லூரி கெஸ்ட் அவுசில் கலைஞர் அவர்கள் தங்குவதற்காக ஒரு அறை இருக்கிறது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்றாலும் அங்கேதான் தங்குவாராம். அந்த அறையைத்தான் எனக்குக் கொடுத்தார்கள்.

என்னை எப்படி பார்த்துக் கொண்டார்கள் என்றால், சொந்தப் பிள்ளை போன்று பார்த்துக் கொண்டார். அவருடைய மகனை என்னை கவனித்துக் கொள்ளும்படி சொன்னார்.

அந்தக் கல்லூரி, கிளினிங், நீட், டிசப்ளின் அத்தனை ஸ்டூடண்சுங்க இருப்பாங்க, ஒரு சத்தமும் கேட்காது.

நான் அங்கே தங்கியிருந்தபொழுது ஒருவரும் என்னை டிஸ்டர்ப் செய்யவில்லை. என்னுடைய ரசிகர்களும் சரி, மாணவர்களும் சரி. அங்கே ஒரு சமையல்காரர் இருக்கிறார் அவர் மீன் குழம்பு வைத்தார் வாழ்க்கையிலேயே நான் அதுபோன்று சாப்பிட்டது இல்லை.

இதை அய்யா சாப்பிடுவாரா? என்று கேட்டேன். இல்லீங்க, அவர் சாப்பிட மாட்டார் என்று சொன்னார்கள். அவருடைய சாப்பாட்டை பார்த்தீர்களேயானால், கடும் ஏழையைவிட மோசமாக சாப்பிடுகிறார். அதனால்தான் அவருடைய உடல் நன்றாக இருக்கிறது.

என்னை இரண்டு முறை வந்து பார்த்து, தலைவர் கேட்டார், ரஜினி சாரை நன்றாகப் பார்த்துக் கொள்கிறீர்களா? என்று சொன்னார். இதைவிட,வேறு என்ன வேண்டும் என்று சொன்னேன்.

அவருக்கு கைமாறாக நாம் என்ன செய்வது என்று நினைத்தேன்.

நல்லவேளையாக, உங்களைப் பார்க்க



வேண்டும் என்று சொல்லி, இந்தப் புத்தக வெளியிட்டு விழாவைப்பற்றி சொன்னார்கள்.

### கலைஞர் சொன்ன தலைப்பு!

இல்லையென்றால், நான் கண்டிப்பாக இந்த விழாவினை தவிர்த்திருப்பேன்.

இந்தப் புத்தகத்தை நான் எழுதியிருக்கிறேன். இதை எழுதி ரொம்ப நாட்களாயிற்று. இந்த விஷயத்தை நான் கலைஞர் அவர்களிடம் சொன்னேன்.

யாரை கேட்டு புத்தகத்தை எழுதினாய்? உனக்கு வேறு வேலையே கிடையாதா? என்று கேட்டார்.

எழுதிவிட்டேன்; மூன்று தலைப்புகள் இருக்கிறது அந்தத் தலைப்பை நீங்கள்தான் தேர்வு செய்யவேண்டும் என்று சொன்னேன்.

கலைஞர் ஓர் அன்னை என்ற தலைப்பை கலைஞர் செலக்ட் செய்தாராம்.

அருமையான ஒரு தலைப்பு இது.

இப்போது எல்லோரும் தாய் மகன் புத்தகத்தைப்பற்றி எழுதினார்கள். அது ஒரு காவியம். அதுபோன்ற ஒரு புத்தகத்தை படிக்கவில்லை என்றால், வாழ்க்கையில் மிகப்பெரிய அளவிற்கு நீங்கள் மிஸ் செய்கிறீர்கள்.

ஒரு ஆதிக்கவர்க்கத்திற்கும் தொழில்வர்க்கத்திற்கும் இடையே நடைபெறுகின்ற போராட்டம், புரட்சி!

அந்த மகனை, அந்தத் தாய் எப்படியெல்லாம் காப்பாற்றுகிறாள்; அவனுடைய போராட்டம், புரட்சிக்கு உதவி செய்கிறாள். எவ்வளவு சோதனைகளை சந்திக்கிறாள் என்பதைப் பற்றி நீங்கள் படிக்கவேண்டும். இது ஒரு காவியம்.

அதனால்தான் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார் இந்தப் புத்தகத்தை மூன்று முறை படிக்கும்பொழுது என்னுடைய தாயை நினைத்து நான் கண்ணீர் விட்டேன் என்று.

### தாஜ்மகால் போன்று கலைஞர் நினைவிடம்!

அவர் சின்ன வயதில் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல், போராட்டங்கள், சமூக நீதி, சமூகம் என்று போகும்போது, அவருடைய தாய், அவருக்கு எந்த அளவிற்கு உதவியாக இருந்தார் என்பதைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறார்.

கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்கு நான் அதுவரையில் போனது கிடையாது. முழு நிலவு அன்றைக்கு என்னை ஸ்டாலின் சார்தான் அழைத்துச் சென்றார். எ.வ.வேலு அவர்களின் பொறுப்பேற்று கட்டியிருக்கிறார். தாஜ்மகால் போன்று இருக்கிறது.

அதேபோன்று, கலைஞர் அவர்கள் பிறந்த ஊரில், கலைஞர் கோட்டம் என்று கட்டியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக அதை நான் பார்ப்பேன். எந்த வேலை கொடுத்தாலும், அதனைக் கச்சிதமாக செய்கிறார் எ.வ.வேலு அவர்கள்.

இந்தப் புத்தகத்தில் உள்ள படங்களை நான் பார்த்தேன். வடிவமைப்பு மிக மிக அருமையாக இருக்கிறது.

இங்கே உரையாற்றியவர்கள் சொன்னது போன்று, கலைஞர் அவர்களுக்கு திருக்குறள் எவ்வளவு பிடிக்கும் என்று எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

அந்தத் திருக்குறளை ஒவ்வொன்றும் எழுதி, கலைஞருடைய விளக்கத்தை அதற்குக் கொடுத்து அந்தக் குறளுக்கேற்ப கலைஞர் அவர்கள் எப்படி வாழ்ந்தார்? என்பதை அத்தியாயம் அத்தியாயமாகப் பதிப்பித்திருக்கிறார்கள். இது ஒரு காவியம்.

முன்னுரையைக்கூட நம்முடைய சி.எம். அவர்கள் மிக அருமையாக எழுதியிருக்கிறார். இது ஓர் அருமையான புத்தகம். ஆனால், விலைதான் கொஞ்சம் அதிகம் ஆயிரம் ரூபாய். ஆனால், இந்தக் குவாலிட்டிக்கு இந்த விலைதான் நிர்ணயிக்க முடியும். அடுத்த புத்தகத்திற்காவது குறைந்த விலை நிர்ணயித்தால், எல்லோரும் படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்கிற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிய நாயகன் என்னுடைய அருமை நண்பர், கலைஞர் அவர்களைப்பற்றி என்ன பேசுவது அவருடைய திரைப்படப் பணிகளைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். அவருடைய இலக்கியத்தைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. அவருடைய அரசியல் வாழ்க்கையைப்பற்றி எல்லோருக்கும் தெரியும்.

### கலைஞர் சந்தித்த சோதனைகள்!

அண்மையில், கலைஞர் நாணயம் வெளியீட்டு விழாவில், ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங், அரை மணிநேரம் பேசியிருக்கிறார் என்று சொன்னால், அதை ராஜ்நாத் சிங் மட்டும் பேசியிருக்கமாட்டார்; மேலே இருந்து ஒரு உத்தரவு வந்திருக்கும்.

எல்லோரும் பாராட்டி மகிழ்கின்ற ஒரு மனிதர் கலைஞர். மிகவும் அபூர்வமானவர்.

ஒரு மனிதனாகப் பிறந்தால், இந்தக் குலம், இந்த ஜாதி, இந்தப் பெயர், பெண்டாட்டி, பிள்ளை, ஒரு 10, 15 உறவினர்கள், அலுவலகத்தில் ஒரு 20 பேர் ஆக மொத்தம் 50 பேருக்குள் வாழ்க்கை முடிந்துவிடும். அந்த 50 பேரை சந்தோஷப்படுத்தி, அவர்கள்முன் நன்றாக வாழவேண்டும் என்று போராடி, செத்துவிடுகிறோம்.

ஆனால், சில பேர்தான் சமூகத்திற்கு, ஓர் இனத்திற்கு, சமூக நன்மைக்காக போராடவேண்டும், பாடுபடவேண்டும் என்பவர்கள். அதில் கலைஞர் மிக முக்கியமானவர். அவர் சந்தித்த சோதனைகள், விமர்சனங்கள் போன்று வேறு யாராவது சந்தித்திருந்தால் காணாமல் போயிருப்பார்கள்.

### விமர்சனம் செய்பவர்கள் யார் மனதையும் நோகடிக்கக்கூடாது!

விமர்சனங்கள் வேண்டும்; தேவை அது ஒரு மழை போன்று இருக்கவேண்டும்; புயல் போன்று இருக்கக் கூடாது. புயல் போன்று இருந்தால், சில மரங்கள் சாய்ந்து போய்விடும். ஆனால், இது ஆலமரம் மிகவும் உறுதியானது.

அவருடைய உடன் பிறப்புகள் அந்த வேர் மிகவும் உறுதியானது. அந்த மரத்தை யாராலும் அசைக்க முடியாது. இல்லையென்றால், 13 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாவிட்டாலும் கூட, ஒரு கட்சியைக் காப்பாற்ற முடியுமா?

5 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாததால், திண்டாடுகிறார்கள். கலைஞர் செய்தது சாதாரண விஷயமல்ல.

கலைஞர் அவர்கள் மறைந்தாலும், அவருடைய புகழ் அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

பாரதியார் இறந்தபொழுது, 15 பேர்கூட இல்லை. ஆனால், இன்றைக்கு அவருக்கு எவ்வளவு புகழ்.

அதுபோன்று கலைஞருக்கு நாளுக்கு நாள் புகழ் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அவரைப்பற்றி பல புத்தகங்கள் வெளிவருகின்றன. அவரைப்பற்றி படம் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பெரிய பத்திரிகையாளர் நண்பர் அவர் கலைஞரை நிறைய இன்டர்வியூ செய்திருக்கிறார்.

> **வலுவான ஆலமரம் தி.மு.க.!**
>
> **“ கலைஞரின் உடன்பிறப்புகளாலான வலுவான ஆலமரம் திமுக. இதையாராலும் அசைக்க முடியாது. புயல்வந்தால் மரங்கள் சாய்ந்து விடும். ஆனால் தி.மு.க. என்ற ஆலமரம் ரொம்ப Strong. அதை எந்த புயல்களாலும் ஒன்றும் செய்யமுடியாது. ”**

### கலைஞரின் மிகப்பெரிய குணம்!

கலைஞரைப்பற்றி என்னிடம் அவர் ஒரு முறை சொன்னார் அவரைப்பற்றி விமர்சனம் வந்தால், அதை அவர் எப்படி எடுத்துக் கொள்கிறார் என்றால், அந்த விமர்சனத்தை யார் எழுதியது? என்று பார்ப்பார்கள். அதனுடைய பின்புலத்தைப் பார்ப்பார். வேறு யாராவது ஏவிவிட்டு எழுதுகிறானா என்று பார்ப்பார். பணம் வாங்கிக் கொண்டு எழுதுகிறானா? என்று பார்ப்பார்கள். அதைப் பார்த்துவிட்டு, இப்படித்தான் என்று தெரிந்து விட்டால், அதைப் பார்க்கவே மாட்டாராம்.

சரியான முறையில் விமர்சனம் செய்திருந்தால், அதைத் தவறாமல் படிப்பாராம். அதில் ஏதாவது தவறு இருந்தால், அந்த விமர்சனம் செய்தவரை அழைத்து, இதனால்தான் இதை செய்தேன் என்று சொல்வாராம். இது ஒரு மிகப்பெரிய குணம்.

இப்பொழுதும் விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்யவேண்டும்; செய்யுங்கள். ஆனால், யாருடைய மனதையும் நோகடிக்காதீர்கள்.இப்பொழுதெல்லாம் யார் பிரஸ்ஸை சந்திக்கிறார்கள். யாரும் சந்திக்க மாட்டார்கள். அது அவ்வளவு எளிதல்ல.

ஆனால், கலைஞர் அவர்களுக்குப் பத்திரிகையாளர்கள் சந்திப்பு என்றால், யானைக்குக் கரும்பு சாப்பிடுவது போன்றதாகும். பத்திரிகையாளர்களைப் பார்த்தாலே, ஒரு புன்சிரிப்புடன் எதிர்கொள்வார்.

எதிர்க்கட்சி பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்கும்பொழுது, அந்தக் கேள்விக்குத் தெளிவாக, நக்கலாக பதில் சொல்லிவிட்டுப் போவார். இது யாருக்கும் சர்வ சாதாரணமாக வருகின்ற விஷயமல்ல.

எத்தனையோ பேச்சாளர்கள் இருக்கிறார்கள்; ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி இருக்கும். நல்ல பேச்சாளர்கள் எப்படி என்றால், இடை இடையே கேப் கொடுப்பார்கள். சில இடங்களில் அழுத்துவார்கள்; சில இடங்களில் ரோஷமாகப் பேசுவார்கள்; சில இடங்களில் மெதுவாகப் பேசுவார்கள்; சில இடங்களில் கர்ஜிப்பார்கள்.

### கலைஞரின் பேச்சுத் திறமை!

ஆனால், கலைஞருடைய பேச்சை கேட்டீர்களேயானால், ஒரே சுரத்தில் இருக்கும். அதைக் கேட்பவர்களுக்குத் துள்ளல், சிரிப்பு, கோபம் வரும். கலைருடைய பேச்சுத் திறமை அதுதான்.

அவரைப் எப்பொழுது பார்த்தாலும், வாங்க, எப்படி இருக்கிறீங்க? சூட்டிங் எப்படி போகிறது? விசாரிப்பார்கள். முதலில் சூட்டிங் கைப்பற்றித்தான் விசாரிப்பார்; ஏனென்றால், அதுதானே அவருக்குத் தாய் வீடு.

எப்பொழுதும் மகிழ்ச்சியாகத்தான் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். இரண்டு முறை மட்டும் அவர் சோர்ந்து போய், மிக சோகமாக அவர் சொன்னது ஒன்று, முரசொலி மாறன் அவர்கள், அப்பலோ மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருக்கும்பொழுது மிகவும் சோகமாக இருந்தார்.

இரண்டாவது முறை, தலைமைச் செயலகத்தில், வீரப்பன், ராஜ்குமாரை கடத்திக் கொண்டு போனபோது, மிகவும் சோகமாக இருந்தார். இப்படிப் பண்ணிவிட்டானே, என்ன பண்ணுவது? என்று.

அந்த இரண்டு முறைதான் நான் அவரை சோகமாகப் பார்த்திருக்கிறேன்.

மற்றபடி அவர் சி.எம்.மாக இருந்தாலும் ஒன்றுதான், சி.எம். இல்லாமல் இருந்தாலும் ஒன்றுதான்.

அவர் சி.எம்.மாக இருந்தால், அவருடைய வீட்டின் முன்பு நிறைய போலீஸ் பாதுகாப்பு இருக்கும். ஆகா, இவர் இப்பொழுது சி.எம். இல்லையென்றால், எந்த வித்தியாசமும் தெரியாது.

### சிவாஜி திரைப்படம்!

‘சிவாஜி’ திரைப்படத்தை நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள் முழு படத்திலும் அரசியல் வாதிகளை விமர்சனம் செய்து, அரசாங்கத்தை விமர்சனம் செய்து, லஞ்சத்தைப்பற்றி சொல்லி எடுத்த திரைப்படம் அது.

அந்தக் கதை தெரிந்திருந்தும், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அந்தத் திரைப்படத்தை வந்து பார்த்தார். அப்பொழுது வைரமுத்து அவர்களும் இருந்தார். அவர் சொன்னார், சார் உங்களுக்கு ரொம்ப தைரியம்; இதுபோன்று ஒரு படத்தை எடுத்துவிட்டு, சி.எம். பக்கத்திலே அமர்ந்து பார்க்கிறீர்களே? என்றார்.

படத்தைப் பார்த்துவிட்டு சி.எம். கலைஞர் அவர்கள் சொன்னார்கள், நமக்கும் இதையெல்லாம் ஒழிக்கவேண்டும்; நல்லது செய்யவேண்டும் என்று ஆசை என்று சொல்லி, ஒரு பெருமூச்சு விட்டார். அந்தப் பெருமூச்சில் பல ஆயிரம் விஷயங்கள் இருந்தது.

அதற்குப் பிறகு நான் வைரமுத்து அவர்களிடம் சொன்னேன் சி.எம். அவர்கள் பார்த்தது முக்கியமல்ல இந்தத் திரைப்படத்தின் வெற்றி விழாவில் நான் கலந்துகொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்றேன். அது தைரியம்!

அந்தத் திரைப்படத்தின் வெற்றி விழாவில் கலந்துகொண்டு, எல்லோரைப் பற்றியும் புகழ்ந்து பேசி, எல்லோருக்கும் கேடயம் கொடுத்து, சந்தோஷப்பட்டார்.

### கலைஞரின் அன்பு, பாசம்!

ஒருமுறை எனக்கு உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தேன். மூச்சுத் திணறலோடு நான் இருந்தபொழுது, மஞ்சள் துண்டு அணிந்து என் முன் வந்து நிற்கிறார். கிட்டே வந்து என் கைகளைப் பிடித்துக்கொண்டார்; அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வெளியே வருகிறது.

நான் என்ன செய்தேன் அவருக்கு?

எவ்வளவு ஓர் அன்பு, பாசம் கொஞ்ச நாள் பழகிய எனக்கே அப்படி என்றால், கூடவே இருக்கும் உங்களுக்கு எப்படி இருக்கும்?

அவர் கண்களில் கண்ணீர் என்னுடைய கைகளை வருடினார். அவருடைய கை பூவை விட மென்மையானதாக இருந்தது.

என் வாழ்நாளில் அவர் விட்ட கண்ணீரை, அந்த ஸ்பரிசத்தை என்னால் மறக்கவே முடியாது.

அவர் போன்ற ஒரு மகானைப்பற்றி பேசினால், பேசிக்கொண்டே போகலாம்.

இதுபோன்ற ஓர் அருமையான புத்தகத்தை வெளியிட்டு, அந்தப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்கின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்த எ.வ.வேலு அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. சி.எம். அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னு ரையை முடித்துக் கொள்கிறேன்.

ஏதாவது தவறு இருந்தால், என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பேசினார்.